மாஹோ பிரதேச சபை - 2024

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மாஹோ பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உப பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் மாஹோ பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுடன் இணங்காமை

	உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டில் சபை நிதியத்தில் இருந்து ரூபா 126,335 செலவிடப்பட்டிருந்த போதும் முடிவு பெறாத 05 வழக்கு நடவடிக்கைகள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை.	2024 ஆம் ஆண்டில் முடிவடையாதிருந்த வழக்குகள் தொடர்பான விபரங்கள் எதிர்வரும் ஆண்டில் தயாரிக்கின்ற நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படும்.	தொடர்புடைய தரப்பினருடன் மேற்கொள்ளப்படுகின்ற கொடுக்கல் வாங்கல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	சொத்துக்களின் இருப்பு, ஆயுட்காலம், பெறுமதி, சொத்தொன்றின் தன்மை போன்ற விடயங்களின் அடிப்படையில் சொத்துக்கள் வகைப்படுத்தப்பட்டு கணக்கீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் நுகர்வுப் பொருளாக இனங்காணக் கூடிய சௌக்கு கத்திகள், புனல்கள் மற்றும் கொடிகள் வைத்திருக்கப்படுகின்ற சிறிய பாத்திரங்கள் போன்ற பொருட்கள் நிலையான சொத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	அந்த பொருட்களின் பெறுமதிகள் குறைவாக இருந்த போதிலும் நீண்ட காலம் பயன்படுத்தப் படுவதன் காரணமாக பொருட் பதிவேடுகளுக்கு எடுக்கப்பட்டிருந்தது.	பொதுக் கணக்கீட்டு கொள்கைகளுக்கு இணங்க கணக்கீடு செய்தல் வேண்டும்.

1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டிற்குரிய கிடைக்க வேண்டிய ரூபா 198,877 நிலையான வைப்பு வட்டி வருமானம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வில்லை.	அப்பெறுமதி 2025 ஆம் ஆண்டில் நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்பட்டுள்ளது.	பெறவேண்டிய வருமானங்கள் சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.
(ஆ)	சபைக்கு கையளிக்கப்பட்ட 04 மயான நிலங்கள் மற்றும் கந்துறுகஹமுல இல் அமைந்துள்ள காணியின் பெறுமதி என்பன மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	மதிப்பீடு செய்யப்படாத சொத்துக்கள் எதிர்காலத்தில் சரி செய்யப்படும்.	சபைக்குச் சொந்தமான காணிகளை மதிப்பீடு செய்து சரியாகக் கணக்கீடு செய்தல் வேண்டும்.

1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீதிகளை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான பதிவேடுகள் மற்றும் உறுதிப்படுத்தல் கடிதங்கள் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக பெறுமதி சேர் வரி ரூபா 406,337 இனை திருப்திகரமான பிரகாரம் சான்றுதிப்படுத்த முடியாதிருந்தது.	ஏற்றுக் கொள்கின்றோம்.	போதியளவான எழுத்து மூல சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

1.7 இணங்காமைகள்

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவவ தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனா ன தொடர்பு	இணங்காமைகள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம்			
	143 ஆம் பிரிவு	2012 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின் பின்னர் ஆதனவரி அதிகார பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள பதிய கட்டிடங்களுக்காக தற்காலிக மதிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அதன் பிரகாரம் ஆதனவரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	2008 மற்றும் 2012 இன் மதிப்பீடுகளின் பின்னர் புதிய ஆதனவரி மதிப்பீடு ஒன்று காணப்படாது இருந்ததுடன் 2024 இல் புதிய மதிப்பீட்டின் மூலம் சகல புதிய ஆதனங்களும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.	சட்டத்தின் பிரகாரம் மதிப்பீட்டை மேற்கொண்டு ஆதனவரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி			
(i)	விதி 153	மாதாந்த வருமானங்களின் கூட்டுத் தொகை மற்றும் வருமான நிலுவைப் பணம் தொடர்பான கூற்று ஒன்று பி.ச. 07 படிவத்தின் பிரகாரம்	ஏற்றுக்கொள்கின்றோம்.	பிரதேச சபைகள் விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

		ஒவ்வொரு பிரதேச சபையினதும் பிரதான அலுவலகம் மற்றும் ஒவ்வொரு உபஅலுவலகங்களிலும் பேணிச் செல்ல வேண்டியிருந்த போதிலும் அம்பன்பொல உப அலுவலகத்தில் அவ்வாறான படிவம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை.		
(ii)	விதி 154	சகல உப அலுவலகங்கள் தொடர்பாகவும் சேகரித்தல் தொடர்பான கணக்கு பதிவேடு பி.ச. 09 மாதிரிப் படிவத்தின் பிரகாரம் பிரதேச சபையின் பிரதான அலுவலகத்தில் பேணிச் செல்ல வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான பதிவேடு ஒன்று பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை.	எதிர்வரும் மாதம் முதல் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	பிரதேச சபைகள் விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(iii)	180 முதல் 184 வரையான விதிகள்	ஊழியர் பிணை வைப்பு வைக்க வேண்டிய 10 உத்தியோகத்தர்களிடம் இருந்து பிணைப் பணம் பெற்றிருக்கவில்லை.	பிணை வைப்பு செய்ய வேண்டிய சகல உத்தியோகத்தர்களிடம் இருந்து பிணை வைப்பை பெற்றுக கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	பிரதேச சபை விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை			
	நிதிப்பிரமாணம் 571	பெறுமதி ரூபா 6,420,300 ஆன 02 வருடங்களை விஞ்சிய 241 வைப்புக்கள் தொடர்பான நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	02 வருடங்களை விஞ்சியிருந்த போது வருமானத்திற்கு எடுக் முடியாதிருந்த வைப்பு பணத்தை வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	2010 யூலை 10 ஆந் திகதிய 2010/02 என்ற உள்ளூராட்சி சுற்றறிக்கை			
(i)	05(iv) ஆம் பிரிவு	ஆதனவரி உரிய பிரகாரம் செலுத்தாத ஆதனங்கள் தொடர்பாக ஆதனங்களை தடை செய்யும் அறிவித்தல் குறித்துரைத்த காலத்தில் விநியோகித்து அமுல்படுத்துதல் கால ரீதியில் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.	2025 ஆம் ஆண்டில் ஆதனங்களை தடை செய்யும் நிகழ்ச்சித் திட்டம் ஒன்று மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.	சுற்றறிக்கையின் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ii)	05(x) ஆம் பிரிவு	வருமானம் உழைப்பதற்கு உரிய உபவிதிகள் அங்கீகரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அது தொடர்பில் போதியளவான கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.	ஏற்றுக்கொள்கின்றோம்.	உபவிதிகளை அங்கீகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,864,605 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,802,960 ஆகும்.

2.2 வருமான நிர்வாகம்

2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

சபை செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

		2024				2023			
	வருமானமான மூலம்	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை
		ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000
i.	ஆதன வரியும் வரியும்	6,025	5,638	4,617	1,021	5,569	5,458	4,605	852
ii.	வாடகை	9,157	9,034	8,583	451	9,788	8,320	5,242	3,078
iii.	அனுமதிப்பத்திரக் கட்டணம்	700	964	964	-	728	634	634	-
iv.	ஏனைய வருமானம்	22,500	22,923	6,866	16,057	22,070	19,174	14,810	4,364
	மொத்தம்	38,382	38,559	21,030	17,529	38,155	33,586	25,291	8,294

2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா 38.38 மில்லியனும், சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா 38.56 மில்லியனும், சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 21.03 மில்லியனும் ஆக இருந்ததுடன் சிட்டையிடப்பட்ட	ஏற்றுக்கொள்கின்றோம்.	சகல வருமானங்களையும் விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	வருமானத்தில் ரூபா 17.53 மில்லியன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அறவிட வேண்டியிருந்தது.		
(ஆ)	**வீதவரியும் வரியும்** ஆண்டிற்குரிய ஆதனவரி வருமானத்தில் ரூபா 1,020,797 நிலுவை மீதியொன்று மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் காணப்பட்டது.	உரிய நிலுவை வருமானத்தை அறவிடல் ஆதனங்களைத் தடை செய்யும் நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் திட்டமிடப்பட்டுள்ளது.	நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	**வாடகை** 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டியிருந்த ரூபா 2,101,964 நிலுவை வாடகை மற்றும் ரூபா 407,782 நிலுவைக் கடை வாடகை நடப்பாண்டின் போதும் அறவிடப்பட்டிருக்கவில்லை.	அறவிட வேண்டிய நிலுவை வாடகைப் பணத்தை அறவிடுதற்குரிய சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் நிலுவைக் கடை வாடகைக்கான அறிவித்தல் மேற்கொண்டதன் பின்னர் நிலுவைப் பணம் செலுத்துதலில் இருந்தும் ஆதனங்களை கைப்பற்றுதலை மீண்டும் கைப்பற்றி மீண்டும் கேள்வி கோரப்பட்டிருந்தது. மேலும் அறவிட வேண்டிய நிலுவைக் கடை வாடகைக்காக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	நிலுவை வாடகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	**அனுமதிப் பத்திரக் கட்டணம்** மீளாய்வாண்டிற்காக அனுமதிப் பத்திரக் கட்டணம் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா 754,000 ஆக இருந்த போதிலும் உள்ளபடியான அறவீடுகள் ரூபா 1,110,815 ஆனமையால் 47 சதவீதத்திற்கு மேற்பட்ட முரண்கள் காணப்பட்டது. பொருத்தமான மதிப்பீடு தயாரித்து வருமானத்தை ஆகக்கூடிய செயற்திறனுடன் சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது.	உரிய பணத்தை பெற்றுக் கொள்வதற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.	பொருத்தமான மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றதல்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
பிரதேச சபைகள் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 30 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்கான உபவிதிகள் விதிக்க வேண்டியிருந்த போதிலும் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் விடயங்கள் எது தொடர்பாகவும் சபையினால் உபவிதிகள் விதிக்கப்பட்டிருக்கவில்லை.	கருத்து தெரிவிக்கப்பட வில்லை.	உபவிதிகளை விதித்து வருமானத்தை உழைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
அ)	காணி ஆதனங்களின் பெறுமதி கால ரீதியில் மதிப்பீடு செய்யாமையின் காரணமாக ரூபா 50, ரூபா 100 மிகவும் குறைந்த பெறுமதிகளில் காணி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டதன் காரணமாக உள்ளபடியான நிதி நிலைமை வெளிப்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.	மதிப்பீட்டுத் திணைக்களம் ஊடாக எதிர்காலத்தில் காணி கட்டிடங்களை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சொத்துக்களின் நியாயமான பெறுமதியில் கணக்கீடு செய்தல் வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய 10 கணக்குகளில் ரூபா 29,876,953 மீதி காணப்பட்டதுடன் 04 கணக்குகளுக்குரிய ரூபா 873,272 தொகை 05 வருடங்களை விட பழைய மீதியாகக் காணப்பட்டது.	கருத்து தெரிவிக்கப்பட வில்லை.	பெறவேண்டிய நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய 16 கணக்கு விடயங்களின் கூட்டுப் பெறுமதி ரூபா 29,816,694 ஆக இருந்ததுடன் அதில் 06 கணக்கு விடயங்களில் 05 வருடங்களை விட பழைய மீதி ரூபா 1,431,580 ஆகக் காணப்பட்டது.	கருத்து தெரிவிக்கப்பட வில்லை.	கணக்கு மீதிகளின் இருப்பை பரீட்சித்து செலுத்த வேண்டிய மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சபையினால் பல்வேறு காரணங்கள் அடிப்படையில் நிராகரிக்கப்பட்ட கட்டிட விண்ணப்பங்கள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு அந்த நிர்மாணங்கள் பூரத்தி செய்யப்பட்டிருந்ததா என உறுதிப்படுத்திக் கொள்வதற்கான வேலைத் திட்டம் ஒன்று தயாரித்து அமுல்படுத்தப்படவில்லை.	ஏற்றுக்கொள்கின்றோம்	பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு தகவல்களை உறுதிப்படுத்துதல் வேண்டும்.
(ஆ)	வடமேல் மாகாண நீர் வளங்கள் மற்றும் சுற்றாடல் சுகாதாரப் பிரிவினால் சமூக அடிப்படையிலான அமைப்புக்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்டிருந்த	ஏற்றுக்கொள்கின்றோம்	வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

வழிகாட்டிகளின் பிரகாரம் சமூக அடிப்படையிலான அமைப்புக்களின் மேற்பார்வை மற்றும் கட்டுப்பாடு தொடர்பாக பிரதேச சபைக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் சபையினால் அது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்க வில்லை.		

3.4 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
உச்ச இருப்பு மட்டம் ஒன்றை இனங்கண்டு சரியான களஞ்சிய முகாமைத்துவம் செய்யாமையின் காரணமாக ரூபா 100,640 ஆன காகிதாதி விடயங்களில் 10 வகைகள், ரூபா 11,970 அச்சிடப்பட்ட ஆவண விடயங்களில் 12 வகைகள் மற்றும் ரூபா 99,145 பெறுமதியுடைய வீதி விளக்கு விடயங்கள் என்பன 10 வருடங்களுக்கும் 05 வருடங்களுக்கும் மேற்பட்ட காலம் முதல் பயன்படுத்தப்படாமல் களஞ்சியத்தில் காணப்பட்டது.	அச்சிடல் இயந்திரம் பயன்பாட்டில் இருந்து அகற்றப்பட்டமையால் அந்த அச்சிடல் இயந்திரத்திற்காக அதுவரையில் கொண்டு வரப்பட்ட டோனர் இருப்பு களஞ்சியத்தில் மீதியாக இருந்ததுடன் களஞ்சிய மெய்மையாய்வு தீர்மானத்தின் பிரகாரம் ஏலம் இடுவதற்கு சமர்ப்பிக்கப்பட்டது. அச்சிடல் ஆவணங்களின் மாதிரி இட அளவு போதாமையின் காரணமாக பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது இருந்ததுடன் எதிர்காலத்தில் தேவையாக உள்ளவைகளைப் பயன்பாட்டிற்கு எடுப்பதற்காக களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது.	தேவையினை சரியாக இனங்கண்டு பொருட்கள் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ) சபையின் நிலையான சொத்துக்களில் உள்ளடக்கப்பட்ட காணிக் கூறுகள் தொடர்பான 07 விடயங்கள் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வில்லை.	காணிகளை கையளித்தல் தொடர்பாக மீண்டும் பிரதேச செயலகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.	கையளிக்கப்படாத காணிகளை கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ) பெறுமதி ரூபா 206,070,846 ஆன 48 காணிகள் மற்றும் சபையினால் பராமரிக்கப்படுகின்ற 181 மயான நிலங்களுக்கு இடையே 166 இன் உரித்து சபைக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை.	பிரதேச சபைக்கு கையளிக்கப்படாத 48 காணிகளை கையளித்தல் தொடர்பான நடவடிக்கைகள் மாகோ மற்றும் அம்மன்பொல பிரதேச செயலாளரினால் மேற்கொள்ளப்படுகின்றது.	கையேற்கப்படாத காணிகளை கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ) பதிவேடுகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கின்ற 04 மயான நிலங்கள் பௌதீக ரீதியில் அந்த பணிகளுக்காக பயன்படுத்தப்படாது இருந்தமை உறுதிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் அவற்றை முறையான பிரகாரம் சொத்து பதிவேட்டுகளில் இருந்து தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	கையளிக்குமாறு கோரிக்கை இட்டு கம்பன்பொல பிரதேச செயலகத்திற்குரிய 04 மயாண நிலங்களின் இறுதியான கிராம வரைபடம் காணப்படாமையினால் மற்றும் அதாவது மயாண நிலங்கள் பயன்படுத்தப்படாது இருந்தமையால் கையளிக்க	கைளிக்கப்படாத காணிகளை கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

		முடியாதிருந்ததாக பிரதேச செயலாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது.	
(ஈ)	கடந்த ஆண்டுகளில் பொருள் மெய்மையாய்வு சபையின் மூலம் விற்றுத் தீர்ப்பதற்காக பரிந்துரை செய்யப்பட்ட ரூபா 125,000 ஆன லோரல் கை டெக்டர் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் விற்றுத் தீர்க்கப்படவில்லை.	கருத்து தெரிவிக்கப்பட வில்லை.	விளைவற்ற சொத்துக்களை விற்றுத் தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.5 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டிற்காக மூலதன செலவின விடயங்களுக்காக ரூபா 2,178,912 மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 17,223,834 செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மதிப்பீட்டை விஞ்சி ரூபா 15,044,922 அதாவது 690 சதவீத மூலதன செலவினம் செய்யப்பட்டிருந்தது.	கருத்து தெரிவிக்கப்பட வில்லை.	மதிப்பீட்டை சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	பெறுமதி ரூபா 5,450,000 ஆன நிதியேற்பாட்டு தொகையில் பாதீடு செய்யப்பட்டிருந்த 03 வேலைகள் மீளாய்வாண்டில் ரூபா 1,746,825 தொகை செலவில் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பொருத்தமான மதிப்பீடு தயாரிக்காமை முகாமைத்துவத்தில் காணப்பட்டிருந்த நலிவாக சுட்டிக்காட்டுகின்றோம்.	நிர்மாணத்தின் கீழ் நிர்மானிக்கப்பட்டமையால் மற்றும் வாகன தரிப்பிட சந்தையில் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட திட்டங்கள் மாற்றமடைந்தமையால் மேற்கூறப்பட்ட வேறுபாடு ஏற்பட்டிருந்தது.	பொருத்தமான அடிப்படையில் பாதீட்டு மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும்.

3.7 மனிதவள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒட்டுமொத்த பதவியணியில் 30 வெற்றிடங்களும் 42 மிகையும் காணப்பட்டது. அங்கீகரிக்கப்பட்ட பதவியினை விஞ்சி சேர்க்கப்பட்டிருந்த முன்பள்ளி பாடசாலை உதவியாளர்கள் 03 பேர்களுக்காக மீளாய்வாண்டில் ரூபா 148,650 சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தது.	ஏற்றுக் கொள்கின்றோம்.	மனித வளங்களை ஆகக் கூடிய செயற்தினனாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்துவதன் மூலம் நிறுவனத்தின் நோக்கம் மற்றும் இலக்குகளை அடைந்து கொள்வதற்கு செயற்பட வேண்டியிருந்ததுடன் மிகைப் பதவியணியினரை அங்கீகரித்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 09 ஊழியர்களிடம் இருந்து ரூபா 342,860 தொகை ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் முதல் அறவிடப்படாத மீதியாகக் காணப்பட்டது.	ஏற்றுக் கொள்கின்றோம்.	நிலுவையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
2024 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த வருடாந்த திட்டத்தில் இனங்காணப்பட்டிருந்த செயற்பாடுகள் மற்றும் இலக்குகள் குறித்துரைத்த ரீதியில் காண்பிக்கப்படாது இருந்ததுடன் அபிவிருத்தித் திட்டம் மற்றும் உபதிட்டங்களுக்கு இடையே முறையான தொடர்பு ஒன்று காணப்படவில்லை.	எதிர்காலத்தில் தயாரிப்பதற்கு உரிய செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றது.	தேவையினை இனங்கண்டு முறையான தொடர்பு ஒன்றுடன் திட்டங்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.

4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
04 வருமான தலைப்புக்களில் மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானத்திற்கு இடையே 13 சதவீதம் முதல் 47 சதவீதம் வரையிலான முரண்களும், 06 செலவின விடயங்களில் மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம் மற்றும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே 15 சதவீதம் முதல் 690 சதவீதம் வரையிலான நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தமையும் காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பாதீடு நிதிக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.	கருத்து தெரிவிக்கப்பட வில்லை.	பாதீடு நிதிக்கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படல் வேண்டும்.

4.3 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
2030 இன் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபையினால் போதியளவான பிரகாரம் அறிந்திருக்காதிருந்ததுடன் நிலைபேறான அபிவிருத்தித் திட்டமும் தயாரித்து அங்கீகரித்திருக்கப்பட வில்லை. அதனால் நிலைபேறான அபிவிருத்தி செயல் முன்னேற்றத்தை அளவிட முடியாதிருந்தது.	எதிர்வரும் ஆண்டின் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிலைபேறான அபிவிருத்தித் திட்டம் ஒன்று தயாரிக்கப்படல் வேண்டும்.